திரு. ஏ. சுப்பிரமணியம்: தலைவரவர்களே, இரண்டு நாட்களுக்கு முன்பு இங்கே பொதுப் பணித்துறை அமைச்சரவர்கள் தந்த ஒரு விளக்க அறிக்கை பற்றிய பிரச்னை வந்தபொழுது ரூல் 82-ஏ-யின்படி அந்த விவர அறிக்கை தரப்பட்டதாக இங்கே திரும்பத் திரும்பச் சொல்லப்பட்டது. ஆனால் இப்பொழுது 3 ஆம் தேதிய 'ப்ரீஃப் ரிகார்டில்'

"Under Rule 82 of the Tamil Nadu Legislative Assembly Rules, the Hon. Minister for "Public Works" made a statement . . . ."

என்று இருக்கிறது. அன்று சொன்னது, ரூல் 82-லே செய்யப் பட்டது என்று திரும்பத் திரும்ப சொல்லிய நேரத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவரவர்கள், இல்லை, ரூல் 82-ஏ-யின்படி தான் அந்த ஸ்டேட்மெண்ட் வழங்கப்பட்டது என்று திரும்பத் திரும்பச் சொன்னார்கள். இதுதான் சரியான ரெக்கார்ட், இந்த ரெக்கார்டில் ரூல் 82 என்று இருக்கிறது. எப்படி அன்றைக்கு 82-ஏ என்று திரும்பத் திரும்பச் சொல்லப்பட்டது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அதுபற்றிப் பார்த்து பிறகு முடிவு சொல்கிறேன்.

3. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு நில ஆக்கிரமிப்பு (திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே, "தமிழ்நாடு, 1975-ஆம் ஆண்டு நில ஆக்கிரமிப்பு (திருத்த) சட்ட முன்வடிவை" அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே, இச் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இச்சட்ட முன் வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.